ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2383/27 - 2024 මැයි මස 08 වැනි බදාදා - 2024.05.08
*2383/27 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

நியதிச்சட்ட முறையான இலக்கம் :- 4648
அடையாளம் அறியும் இல. :- மட/ 126

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

19 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை நிர்ணயம்

மட்டக்களப்பு, லவ்லேன், இல. 10, "கதிரவாஸ" இல் வசிக்கும் திருமதி வத்சலாதேவி மாணிக்கவாசகர் அவர்களால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச்சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ள நிலையில், சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், இந்த ஆணைக்குழுவினால் நியதிச் சட்டமுறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகவிருந்த கமத்தொழிற் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதிக்கப்பட வேண்டிய பகுதியைக் குறிப்பிட்டு சட்டமுறையானதொரு விதிப்பு விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியதிச் சட்டமுறையான குத்தகைக்காரருக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப் பகுதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

சட்டத்தரணி **பண்டுகாபய ஹர்ஷ கீர்த்தினந்த,**
தலைவர்,
காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.

இல. 475, கடுவெல வீதி,
பத்தரமுல்லை,
2024, மே 08.

**அட்டவணை**

1. கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில் திருக்கோவில் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட ஆரம்ப வரைபட இல. அம் 513 இல் காட்டப்பட்டுள்ளதுமான சோலாய்காடு எனும் காணியில் பிரிவிடப்படாத 27 ஏக்கர் 2 றூட் 18 பேர்ச்சஸ் அளவு கொண்ட காணித்துண்டு இலக்கம் 4 மற்றும் அதனுள்ளடங்கிய மரங்கள், பழங்கள் மற்றும் கட்டிடங்கள்.

1A – PG 6721 – 14 (2024/05)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*2. கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில் திருக்கோவில் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட ஆரம்ப வரைபட இல. அம் 507 இல் காட்டப்பட்டுள்ளதுமான கந்தகாடு எஸ்டேட் எனும் காணியில் 22 ஏக்கர் 1 றூட் 22 பேர்ச்சஸ் அளவு கொண்ட காணித்துண்டு இலக்கம் 1 மற்றும் அதனுள்ளடங்கிய மரங்கள், பழங்கள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.*

EOG *05-0068*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.